பக்கங்கள் 19

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 13 வியாழக்கிழமை 29.11.2023 அதிர்வு 121

## புன்னக்குடா கடலில் மூழ்கி 16 வயது மாணவன் மாயம்!

மட்டக்களப்பு – ஏறாவூர் பிரதேசத்தில் புன்னக்குடா கடலில் நேற்று நீராடிய பாடசாலை மாணவன் ஒருவர் காணாமல்போயுள்ளார் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு காணாமல்போனவர் 04

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி திடீரென இடைநிறுத்தம்

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இதுவரை 40 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், இரண்டாம் கட்ட அகழ்வுப் பணி இன்றுடன் நிறுத்தப்பட்டுள்ளது என்று சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் 04





# தேர்தலை இலக்குவைத்து 'மொட்டு'க் கட்சி பிரசாரம்



## ஜனவரி முதல் ஆரம்பம்

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலை இலக்கு வைத்து ஜனவரி முதல் கிராமிய மட்டத்திலான பிரசார நடவடிக்கையை மேற்கொள்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இரண்டாவது தேசிய சம்மேளனம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது கட்சியின் முக்கிய சில பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதுடன், புதிய நியமனங்களும் இடம்பெறவுள்ளன . 2024 வரவு - செலவுத் திட்டக் கூட்டத் தொடர் டிசம்பரில் முடிவடைந்த பின்னர் நாடாளுமன்றம் ஜனவரி வரை ஒத்திவைக்கப்பட்டு, ஒருமாத கால விடுமுறை வழங்கப்படும். 04

## யானையின் தாக்குதலில்

# சுவர் இடிந்து வீழ்ந்து இளைஞர் உயிரிழப்பு



சிகிரியா, கிபிஸ்ஸ பிரதேசத்தில் நண்பர் ஒருவரின் வீட்டில் இளைஞர்கள் குழுவுடன் உறங்கிக் கொண்டிருந்தபோது காட்டு யானை சுவரைச் சேதப்படுத்தியதில் அது இடிந்து வீழ்ந்து 04

# பதில் பொலிஸ்மா அதிபராக தென்னக்கோன் நியமனம்


பதில் பொலிஸ்மா அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த நியமனம் இன்று வழங்கப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபராக இருந்த சி.டி விக்கிரமரத்ன 04



# சவேந்திர உள்ளிட்ட போர்க்குற்றவாளிகளை தடை செய்யப் பிரிட்டனில் தொடரும் முயற்சி!

## டேவிட் சிம்மண்ட்ஸ் எம்.பியுடன் இராஜதந்திரச் சந்திப்பு



இலங்கையின் பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட யுத்தக் குற்றவாளிகளை பிரித்தானியாவின் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான தடைவிதிப்பு அதிகார சபையின் கீழ் (Global Human Rights Sanction Regime) தடை செய்வதற்கு பிரித்தானிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க 04



# வலையில் சிக்கி இறந்த நிலையில் மஸ்கெலியாவில் சிறுத்தை மீட்பு!

(மஸ்கெலியா நிருபர்: செ.தி. பெருமாள்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள புரவுன்ஷீக் தோட்ட டனட்டர் பிரிவில் சாலை ஓரமாக தேயிலை செடிகளின் பகுதியில் கட்ட பட்டிருந்த கம்பி வலையில் சிக்கி சிறுத்தை ஒன்று இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இது பற்றி மஸ்கெலியா பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து, மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவால் நல்லதண்ணி வன பாதுகாப்பு அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சிறுத்தை வலையில் சிக்கிய பகுதிக்கு நல்லதண்ணி வன பாதுகாப்பு அதிகாரிகள் உடன் சென்று இறந்த நிலையில் சிறுத்தையை மீட்டுச் சென்றுள்ளனர்.

இறந்த சிறுத்தையை பேராதெனிய மிருக வைத்திய சாலைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்து உள்ளனர்.

இறந்த சிறுத்தை சுமார் 4 அடி உயரம் 6 அடி நீட்டட்டம் கொண்டது.



# முல்லைத்தீவில் முதுபெரும் கலைஞர் இயற்கை எய்தினார்



(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவின் மூத்த கலைஞரான சிறந்த தவில் வித்துவான் இன்றையதினம் இயற்கை எய்தியுள்ளார்.

முல்லைக்கலைக்கோன், கலாபூஷணம், முல்லைப் பேரொளி ஆகிய விருதுகளை பெற்ற முல்லைத்தீவு முள்ளியவளையை நிரந்தர வதிவிடமாக கொண்ட மூத்த கலைஞரும் சிறந்த தவில் வித்துவானுமாகிய இராமுப்பிள்ளை முருகுப்பிள்ளை ஐயா இன்று அதிகாலை இயற்கை எய்தியுள்ளார்.

அன்னாரின் இறுதியாத்திரை நாளை காலை 10 மணியளவில் அன்னாரின் முள்ளியவளை முதலாம் வட்டார இல்லத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை வயலில் விவசாயி சடலமாக மீட்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவை பிறப்பிடமாகவும் களுவாஞ்சிகுடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் சதீஸ்கரன் என்ற 41 வயதுடைய விவசாயி சம்மாந்துறை கந்தன் வெளி கண்டத்திலுள்ள ஓட்டையன் மடு விவசாயக் காணிப் பிரதேசத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை பிரதேச விவசாயிகள் சம்மாந்துறை பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று சடலத்தை இன்று புதன்கிழமை காலை அடையாளம் கண்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக சம்மாந்துறை பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.





# மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு

(எம்.ஏ.ஏ.அக்தார்)

மாளிகைக்காடு அல் –ஹுசைன் வித்தியாலய மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.சி.எம்.நளீம் தலைமையில் பாடசாலையின் கேட்போர் கூட்டத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக காரைதீவு கோட்டக் கல்வி பணிப்பாளர் ஏ.சஞ்ஜீவன் கலந்து கொண்டு மாணவ தலைவர்களுக்கான சின்னங்களை சூட்டிக் கௌரவித்தார்.



# வடக்கு மாகாண விவசாய, உற்பத்தியாளருக்கு இணையத்தள சந்தைவாய்ப்புக்கு நடவடிக்கை!

(எஸ்.நிதர்ஸன்)

வடக்கு மாகாணத்திலுள்ள விவசாயிகள் மற்றும் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வோர், உற்பத்திகளுக்கான நியாயமான விலையை பெற்றுக் கொள்ளும் நோக்கில் FARM TO GATE என்ற புதிய செயலியை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸின் பணிப்புரைக்கு அமைய FARM TO GATE செயலிக்கான மென்பொருள் வடிவமைப்பு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு தை மாதம் FARM TO GATE செயலியை அங்குரார்ப்பணம் செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

FARM TO GATE ஊடாக விவசாயிகளிடமிருந்து, நுகர்வோர் நேரடியாக தங்களுக்கு தேவையான உற்பத்திகளை மொத்தமாகவோ அல்லது சில்லறை விலையிலோ கொள்வனவு செய்ய முடியும்.

இதனூடாக விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையை பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் மரக்கறிகள், பழங்கள் மற்றும் ஏனைய உற்பத்தி பொருட்களை காலவதியாகும் முன்னர் விற்பனை செய்துக் கொள்ள முடியும். நுகர்வோரும் தரமான, புதிய உற்பத்திகளை நேரடியாக பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளை FARM TO GATE ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளது.

FARM TO GATE செயலியில் விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களின் தரவுகள் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன், உற்பத்திப் பொருள்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய இடம், உற்பத்திகளின் தரம், கையிருப்பிலுள்ள அளவு, விலை உள்ளிட்ட அனைத்து விடயங்களும் தரவேற்றம் செய்யப்பட்டிருக்கும்.

இந்த விடயங்கள் அனைத்தையும் துறைசார் திணைக்களங்களின் கிராமிய மட்ட அலுவலர்கள் மேற்பார்வை செய்ய உள்ளதோடு, விவசாயிகளுக்கு தேவையான ஆலோசனைகளையும் வழங்கி அவர்களை ஊக்கபடுத்தவும் உள்ளனர்.

தற்போது உரிய சந்தைவாய்ப்பு இன்மையால் உற்பத்தியாளர்கள் பெரிய அளவில் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர். இந்த சிக்கலுக்கான தீர்வை வழங்கும் நோக்குடனேயே வடக்கு மாகாணத்தின் ஆளுநரால் FARM TO GATE திட்டத்தை ஆரம்பிக்க பணிப்புரை விடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சு, கூட்டுறவு, கிராமிய அபிவிருத்தி, தொழிற்துறை, கால்நடை, உள்ளூராட்சி திணைக் களங்களின் ஒத்துழைப்புடன் இந்த புதிய முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘கார்த்திகை வாசம்’ மலர்க் கண்காட்சி சங்கிலியன் பூங்காவில் வியாழன் முடிவு

நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடைபெற்றுவரும் கார்த்திகை வாசம் மலர்க்கண்காட்சி நாளை வியாழக்கிழமையுடன் நிறைவடையவுள்ளது.

வடமாகாண சபையின் பிரகடனத்துக்கு அமைவாகக் கார்த்திகை மாதம் ஆண்டுதோறும் வடமாகாண மர நடுகை மாதமாகக் கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது.

இம்மாதத்தில் மரநடுகையை ஊக்குவிக்கும் முகமாகவும் தரமான மரக் கன்றுகளைப் பொது மக்கள் பெற்றுக் கொள்ளும் வகையிலும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டு தோறும் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் தாவர உற்பத்தியாளர்களின் பங்கேற்புடன் கார்த்திகை வாசம் என்ற பெயரில் மலர்க் கண்காட்சியொன்றை நடாத்தி வருகிறது.

இந்த ஆண்டில் கடந்த 22ஆம் திகதி ஆரம்பமான இக்கண்காட்சி 30ஆம் திகதி வியாழக்கிழமையுடன் நிறைவுறுகின்றது.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி முன்னிரவு 7 மணிக்கு நிறைவுறும் இக்கண்காட்சியைத் தினமும் ஆயிரக் கணக்கானவர்கள் ஆர்வத்தோடு பார்வையிட்டு வருகின்றம்சியோடு மலர்ச் செடிகளையும், மரக்கன்றுகளையும், வீட்டுத் தோட்டத்துக்கான செடிகளையும் வாங்கிச் செல்கின்றனர். கண்காட்சியைப் பார்வையிட வருகின்ற மாணவர்கள் அனைவருக்கும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இலவசமாக மரக்கன்றுகளை வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**கொக்குத்தொடுவாய்...**

மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு நடவடிக்கையின் ஒன்பதாம் நாள் பணி இன்று பிற்பகலுடன் நிறுத்தப் பட்டது. இன்றுடன் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணி நிறைவடைந்துள்ளது. இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலே சட்டத்தரணி வி.கே.நிறஞ்சன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி இரண்டு கட்டங்களாக இடம்பெற்றிருந்தது. முதல் கட்டம் பதினொரு நாட்களும், இரண்டாம் கட்டம் ஒன்பது நாட்களுமாக மொத்தம் இருபது நாட்கள் அகழ்வுப் பணி நடைபெற்றது.

இன்றுடன் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. கடந்த தினங்களில் நடைபெற்ற ஸ்கான் இயந்திரப் பரிசோதனை மூலம் குழிக்கு மேற்குப் பக்கமாக இரண்டு மீற்றர் நீளத்துக்கு உடலங்கள் காணப்படுகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.

மீண்டும் அகழ்வுப் பணி அடுத்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி நடைபெறத் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

இன்றுவரை மொத்தமாக 40 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முழுமையாக எடுக்கப்பட்டிருக்கின்றன. இவை அனைத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளுடைய ஆண், பெண் போராளிகளுடைய வித்துடல்கள் என நம்பப்படுகின்றது.

அத்தோடு இப்பிரதேசம் 1984 ஆம் ஆண்டு இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டுக்குள் இருந்த பிரதேசமாகக் காணப்படுகின்றது. ஆரம்பத்தில் இந்த வீதி இருக்காத நிலையில் மக்கள் 2012 ஆம் ஆண்டு குடியேறியதன் பிற்பாடு வீதி செப்பனிடப்பட்டுள்ளது.

ஆகவே, இந்தப் புதைகுழி 2012 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்துக்குரிய புதைகுழியாக இருக்கின்றது. அத்தோடு அடுத்தகட்ட அகழ்வுப் பணிக்குத் தேவையான நிதி வசதிகள், அதற்கான பாதீடுகளைத் தயார் செய்து நீதிமன்றில் தாக்கல் செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி இந்த வழக்கு இடம்பெறவுள்ளது. அத்தோடு பல சான்றுப் பொருட்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

உடலங்கள் கொண்டுவந்து போடப்பட்டு 3 மீற்றர் அகலம் , 14 மீற்றர் நீளம் கொண்ட குழிக்குள் புதைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் வீதிப் பக்கமாக இரண்டு மீற்றர் நீளத்துக்கும் 1.5 மீற்றர் ஆழத்துக்கும் அகழப்படலாம் என கூறப்படுகின்றது.

இதுவரை எந்தவித அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆனால், பேராசிரியர் ராஜ் சோமதேவ இடைக்கால அறிக்கையை டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முதல் சமர்ப்பிப்பதாக நீதிமன்றில் கூறப்பட்டது.

நிதி வழங்கலில் பிரச்சினைகள் இருப்பதாக அறிகின்றோம். இது தொடர்பாக நீதிமன்றத்தில் இன்று கலந்துரையாடப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஒரு கட்டளையும் வழங்கப்பட்டிருக்கின்றது. அரச அதிபரின் காரியாலயத்திலிருந்து ஒருவர் இதற்குப் பொறுப்பாக நியமிக்கப்படவுள்ளார்.” – என்றார்.

---

**பதில் பொலிஸ்மா...**

எதிர்வரும் 25ஆம் திகதி தனது பதவியில் இருந்து ஓய்வுபெறவுள்ளார் என்று அறிவித்துள்ளார்.

சி.டி.விக்கிரமரத்னவுக்கு மூன்று மாதங்களுக்கு வழங்கப்பட்ட சேவை நீடிப்பு காலம் முடிவடைந்த பின்னர், ஜூலை 9 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மேலும் 3 மாதங்களுக்கு சேவை நீடிக்கப்பட்டது.

மூன்றாவது முறையாக மேலும் 3 வார சேவை நீடிப்பு ஒக்டோபர் 13 அன்று வழங்கப்பட்ட நிலையில் நான்காவது முறையாக நவம்பர் மாதம் 3 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை சேவை நீடிப்பு மீண்டும் வழங்கப்பட்டது.

சி.டி. விக்கிரமரத்னவின் சேவை நீடிப்புக்கு அரசமைப்பு பேரவை அங்கீகாரம் வழங்கத் தவறிய பின்னணியில் இத்தகைய சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

**சுவர் இடிந்து...**

19 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சீகிரிய, கிபிஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த அவிந்த இஷான் சமரநாயக்க என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இவர் சிகிரியா பிரதேசத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் ஹோட்டல் முகாமைத்துவப் பயிற்சி பெறுபவர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நெல்லை உண்ண வந்த காட்டு யானை அதனை உட்கொண்டு விட்டு இளைஞர்கள் உறங்கிக் கொண்டிருந்த வீட்டின் சுவரைச் சேதப்படுத்தியபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

---

**புன்னக்குடா கடலில்...**

16 வயதுடைய பாடசாலை மாணவராவார்.

அந்த மாணவனைத் தேடும் பணியில் பிரதேசவாசிகள் மற்றும் ஏறாவூர் பொலிஸார் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

---

**சவேந்திர உள்ளிட்ட...**

வேண்டுமென வலியுறுத்தி, பிரித்தானியாவின் ரூயிஸ்லிப், நார்த்வுட் மற்றும் பின்னர் (Ruislip, Northwood and Pinner) பகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டேவிட் சிம்மண்ட்ஸ் எம்.பியுடன் இராஜதந்திரச் சந்திப்பு நேற்றுமுன்தினம் மெய்நிகர் வழியாக இடம்பெற்றுள்ளது.

சட்ட ஆலோசகரும் மனித உரிமை செயற்பாட்டாளருமான கீத் குலசேகரம் தலைமையில் இடம்பெற்ற இந்த முக்கிய சந்திப்பில், பழமைவாதக் கட்சிக்கான தமிழர்கள் அமைமைப்பின் (British Tamil Conservatives – BTC) செயலாளர் கஜன் ராஜ்ஜ/ம், இனப்படுகொலையைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமாக சர்வதேச மையத்தின் (ICP-PG) சார்பில் றோய் ஜக்ஷனும் கலந்து கொண்டனர்.

அத்துடன் இனப்படுகொலையின் நேரடி சாட்சியங்கள் மற்றும் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களான கங்காதரன் திலக்ஷன், மோகனதர்ஷன் நாகநாதன் மற்றும் ஸ்ரீபன் நாகநாதன் ஆகியோரும் கலந்துகொண்டு, தங்கள் அனுபவங்களைபி பகிர்ந்து கொண்டனர்.

கீத் குலசேகரம் தனது தலைமை உரையின் போது, இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலைக்கு வரலாற்று ரீதியாக பிரித்தானியாவே பொறுப்பு என்பதை விளக்கி, தமிழ் மக்களுக்கு நீதி வழங்க வேண்டிய கடமைப்பாட்டையும் எடுத்துரைத்தார்.

ITJP மற்றும் ICPPG ஆகிய அமைப்புக்கள் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சிற்கு (FCDO) போதுமான ஆதாரங்களைச் சமர்ப்பித்த போதும் இன்னும் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியிருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் மட்டுமன்றி, தற்போது இலங்கையில் தொடரும் ஆள் கடத்தல் மற்றும் சித்திரவதைகளும் சவேந்திர சில்வாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஆயுதப் படைகளே மேற்கொண்டு வருவதால் அதற்கும் சவேந்திர சில்வாவே பொறுப்பு என்றும், சந்திப்பில் கலந்து கொண்ட சித்திரவதைக்குள்ளானவர்கள் இதற்கு நேரடிச் சாட்சி என்றும் தெரிவித்தார்.

சவேந்திர சில்வா யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டிருப்பதை ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதையும், அவர் மீது ஏற்கனவே அமெரிக்கா, கனடா பயணத் தடை விதித்துள்ளதையும் எடுத்துக்காட்டிய அவர், அமெரிக்கா, கனடாவின் வழியை பின்பற்றி பிரித்தானியாவும் தடை விதிக்க வேண்டும் என்று கோரி பிரித்தானிய புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதையும் விவரித்தார்.

அடுத்து உரையாற்றிய கஜன்ராஜ், சவேந்திர சில்வாவைத் தடை செய்வதற்கு இதுவரை 50 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுப்பிய கோரிக்கைகளுக்குச் சரியான பதிலை குஊனுழு தராதது வருத்தத்தைத் தருவதுடன், தற்போதைய பிரித்தானிய அரசு இலங்கைக்கு எதிராக தடை விதிக்க தயக்கம் காண்பிப்பது மிகவும் ஏமாற்றம் தருகின்றது என்றும், இலங்கை யுத்தக் குற்றவாளிகளைத் தடைசெய்வது தொடர்பில் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினரான பொப் பிளக்மன் (Hon. Bob Blackman MP) ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் குழுவை தாங்கள் உருவாக்கியுள்ளதாகவும், அதனில் இணைந்து செயற்படும்படியும் கேட்டுக் கொண்டார்.

அனைவரின் கருத்துக்களையும் உள்வாங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் தனது சந்தேகங்களைக் கேட்டு தெளிவடைந்துடன், ஈழத் தமிழர்களின் கோரிக்கையையும் ஆதங்கத்தையும், தனது பகுதியில் வாழும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் தான் பிரித்தானிய அரசுக்கு எடுத்துரைப்பதாகவும், குஊனுழு இதுவரை நடவடிக்கை எடுக்காமைக்குக் காரணத்தைக் கேட்டு கடிதம் அனுப்புவதாகவும் வாக்களித்தார்.

அத்துடன் கீத் குலசேகரம் கேட்டுக்கொண்டபடி தமிழருக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் குழு (யீபுபுவு) மற்றும் மக்நெட்ஸ்கை தடைகளுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுக்களில் (யீபு கழச ஆயபவைளமல ளுயநஉவழைளெ) இணையவும், குஊனுழு வுக்குத் தமிழ் மக்கள் சார்பில் சவேந்திர சில்வாவைத் தடை செய்யக் கோரி தன்னாலான வகையில் அழுத்தம் கொடுப்பதாகவும் வாக்களித்தார்.

---

**தேர்தலை இலக்கு வைத்து...**

அந்தக் காலப்பகுதியிலேயே வழமையாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்நாடு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணங்களில் ஈடுபடுவார்கள்.

எனவேதான் ஜனவரி முதல் முழு வீச்சுடன் பிரசாரத்தில் இறங்குவதற்குஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் அடுத்த வருடம் நடத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.






# சாய்ந்தமருது மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

**(எம்.ஏ.ஏ.அக்தார்)**

பாடசாலை வறுமை இடை விலகலை தவிர்க்கும் வகையில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு பொறியியலாளர் உதுமான்கண்டு நாபீர் தனிப்பட்ட நிதியின் மூலம் நாபீர் நிதிய மகளிர் அமைப்பின் ஒழுங்குபடுத்தலில் சாய்ந்தமருது றியாலுல் ஜன்னா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளார்.

நிகழ்வில் சாய்ந்தமருது மற்றும் மாளிகைக்காடு பிரதேசத்துக்கு உட்பட்ட 18 கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 180 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மாணவர்களின் பெற்றோரிடம் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக நாபீர் நிதியஸ்தாபகரும், பொறியியலாளருமான கலாநிதி உதுமான்கண்டு நாபீர் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கினார்.

# மாணவர்கள் கௌரவிப்பு

**(மஸ்கெலியா நிருபர்)**

நோட்டன் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் 2022/2023 ஆண்டுக்கான உயர்தரப்பரீட்சையில் சித்தி பெற்ற, பல்கலைக்கழகம் தெரிவாகும் மாணவர்கள் புலமை பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை பாராட்டு கௌரவிக்கும் நிகழ்வு கண்டி கார்பெக்ஸ் கல்லூரியில் இடம்பெற்றது.

வாசகர் வட்டத்தின் தலைவர் ஊடகவியலாளர் ராமின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் போராசிரியர் விஜயச்சந்திரன் , மகபேற்று,பெண்கள் நோயியல் வைத்திய நிபுணர் வ. வசந்தராஜா, மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஆ.ராஜாராம், கண்டி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்சிவகுமார், கொத்மலை கல்வி வலய கோட்டக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி இங்கர்சால், கண்டி கல்வி வலயம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ரமேஸ்பாபு, கம்பளை கல்வி வலயம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் உமேஸ்நாதன், ஊடகவியலாளர் ஜீவா சதாசிவம் உட்பட அயல் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் வாசகர் வட்ட உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நோட்டன், காசல்ரி பிரதேசத்தை சேர்ந்த பல்கலைக்கழகம் தெரிவான 10 மாணவர்கள் உட்பட உயர்தரத்தில் சித்திபெற்ற 31 மாணவர்கள், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற 11 மாணவர்களும் பதக்கம் அணிவித்து சான்றிதழ், அப்பியாசகொப்பிகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதன் போது புலமைப்பரிசில் பரீட்சைக்கு கற்பித்த ஆசிரியர்கள், அதிபர்கள் பெற்றோர்களினால் கௌவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# ஆலங்கேணி விநாயகர் வித்தியில் திறன் வகுப்பறை அங்குரார்ப்பணம்

**(ஹஸ்பர்)**

வன்னி ஹோப் நிறுவனத்தின் அனுசரணையில் திருகோணமலை மாவட்டம் கிண்ணியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயத்துக்குத் திறன் வகுப்பறை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

வன்னி ஹோப் நிறுவனத்தின் அனுசரணையில் நாடாளவிய ரீதியில் முன்னெடுத்துவரும் கிராமப்புற பாடசாலைகள் மற்றும் பயிற்சி நிலையங்களுக்கு திறன் வகுப்பறைகள் வழங்கும் விசேட செயற்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டம் கிண்ணியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயத்துக்கு ஆஸ்திரேலியா நாட்டில் வசிக்கும் தாமோ புஷ்பம் கங்காதரன் நிதி அனுசரணையில் வன்னிஹோப் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த திறன் வகுப்பறை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் வன்னி ஹோப் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் எம்.ரீ.எம் பாரிஸ், வன்னி ஹோப் நிறுவன உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் , மாணவர்கள் மற்றும் சமூக நலன் விரும்பிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அபத்த முயற்சி இது!

பல்வேறு கண்டங்களையும் சேர்ந்த புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைவர்கள் முக்கிய கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டங்களை நடத்துவதற்காகப் புதுடில்லி பறந்திருக்கின்றார்கள். இலங்கையில் இருந்தும் தமிழ்ப் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்குபற்றுவதற்காகப் புதுடில்லி சென்றுள்ளனர். எம்.பிக்களான சி.வி.விக்னேஸ்வரன், சிவஞானம் ஸ்ரீதரன், முன்னாள் எம்.பிக்களான சிவாஜிலிங்கம், ஸ்ரீநேசன் மற்றும் பிரதிநிதிகள் சென்றுள்ளனர்.

ஆஸ்திரேலியா தமிழ் காங்கிரஸ், தமிழ் அமெரிக்க ஐக்கிய அரசியல் நடவடிக்கைக் கமிட்டி, இந்து போராட்டக் குழு, அமெரிக்கத் தமிழ் நடவடிக்கை குழு ஆகியன சில இந்திய இந்து அமைப்புகளுடன் சேர்ந்து நடத்தும் முக்கிய கலந்துரையாடல் இது என்று இது கூறப்பட்டது.

இலங்கையில் வாழும் தமிழ் சமூகத்தின் பரிதாபகர நிலைமைகளை முன்னிலைப்படுத்தி, கொள்கை உருவாக்கம் மற்றும் பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுத்தல் இந்த கலந்துரையாடல்களின் இலக்கு என்று கூறப்பட்டது.

இலங்கையில் பாதிக்கப்பட்டு அல்லாடுவது தமிழர் தரப்பு. பாதிக்கப்படும் தமிழரில் பெரும் பான்மையானோர் இந்துக்கள். பௌத்த - சிங்களப் பேரினவாதம் அவர்களைச் சூறையாடுகின்றது. அவர்களின் தனித்துவத்தைத் திட்டமிட்டு அழிக்கின்றது. சமூக வாழ்வியலை நாசமாக்குகின்றது. அவர்களின் தாயகத்தை கபளீகரம் செய்கின்றது. இந்துக்களின் சமூகக் கட்டுமானங்களை, புராதன மையங்களை இடித்தழித்து, பௌத்த மயப்படுத்து கின்றது பேரினவாதம். இதுதான் யதார்த்தக் களப் புற நிலைமை.

புதுடில்லியில் ஆட்சி பீடத்தில் வீற்றிருக்கும் பாரதிய ஜனதா கட்சி 'இந்துத்துவா' கொள்கையில் ஊறி அதில் தீவிரமாக நிற்கின்றது. அதனுடன் கைகோர்த்தால், இலங்கையில் இந்துக்கள் பௌத்தத்தினால் கபளீகரப்படுத்தப்படும் நடவடிக்கையை இந்திய இந்துத்துவா சகிக்காது, சீற்றம் கொண்டு எதிர்த்து நமக்கு துணை நிற்கும் என்ற கணக்கில் - நப்பாசையில் - இப்போதைய நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தோன்றுகின்றது.

ஆனால் இந்தத் தந்திரோபாயம் சரிவரவே போவதில்லை என்பது உறுதி. இந்தியாவில் வலுப்பெற்று வரும் மோடி தலைமையிலான இந்துத் துவாவின் அடிப்படையைச் சரிவரப் புரியாமல் முன்னெடுக்கப்படும் அபத்த முயற்சி இது.

மோடியின் இந்துத்துவாக்குள் பல உட்புற சமயங்கள் உள்ளன. சைவம், சாக்தம், வைஷ்ணவம், கௌமாரம் என்று அது நீண்டு கொண்டு போகலாம். கௌதம புத்தன் போதித்த பௌத்தத்தையும் மோடியின் இந்துத்துவா புறக்கணிக்கவில்லை. அரவணைத்தே போகின்றது என்பதை நாம் கவனிக்க வேண்டும். இஸ்லாமை அந்நிய மதமாக நோக்கும் சனாதனிகள் பௌத்தத்தை அப்படிப் பார்ப்பதில்லை. புத்தர் கூட பிறப்பால் இந்துவே. இந்து சமயத்தை புதுமெருகூட்டி அவர் ஒரு மார்க்கத்தை பௌத்த மதமாகப் போதித்தார். இந்துக்கள் போற்றும் அத்வைதியான ஆதிசங்கரரை 'பிரசன்ன புத்தர்' என்று அழைப்பதை இன்றைய இந்துத்துவா மறக்கவில்லை. மனதில் இருத்தியே இருக்கின்றது.

புத்தகயாவுக்கும் இலங்கைக்கும் இடையில் வரலாற்று ரீதியான மத இணைப்பை ஏற்படுத்துவதில் மோடி அரசு முன் நிற்கின்றது. தெற்கில் இளைஞர் நாமல் ராஜபக்ஷவை பிரதமர் மோடி அரவணைப்பது வரையில் உள்ள பின்புலத்தை ஆராய்ந்து பார்த்தால் புதுடில்லியின் இன்றைய இந்துத்துவாக்கு வடக்கு - கிழக்கின் சைவமும் தெற்கின் பௌத்தமும் அவர்களின் கோட்பாட்டுக்குள் வரும் உட்பிரிவுகள்தான். அவை வேறு, வேறு அல்ல.

ஆகவே அவற்றில் ஒன்றைக் காட்டி, மற்றது மோடியின் இந்துத்துவாவைப் பற்றி மேலே ஏறுவது என்பது சாத்தியமற்ற அபத்த முயற்சி.

அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூட, பௌத்த கட்டமைப்புகளை விரிவுபடுத்த பல நூறு கோடி ரூபா நிதி உதவிகளை இந்தியத் தரப்பிலிருந்து வழங்கி விட்டுப் போனமையையும் கூட நாம் மறந்து விடக்கூடாது.

# புலமை பரிசில் மாணவனுக்குக் கௌரவம்

(கே. எ. ஹமீட்)

நடைபெற்று முடிந்த புலமை பரிசில் பரீட்சையில் காத்தான்குடி கல்வி கோட்டத்தில் அதி கூடிய (186) புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்த காத்தான்குடி பதுறியா வித்தியாலய மாணவன் எம்.முஸ்னத் அஹ மட்டை கிழக்கு மாகாண முன் னாள் ஆளுநர் கலாநிதி எம். எல்.ஏ.எம். ஹிஸ்புழ்ழாஹ் வாழ்த்திக் கௌர வித்தார்.



வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2023

"அறச்செயல்களின் மொத்த வடிவம் மரமே. கைமாறு கருதாது, நமக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் வாரி வழங்குபவை மரங்கள் தான். தன்னை வெட்டு பவனுக்கும் கூட நிழலாய் இருந்து அவனைக் காப்பதும் மரங்களே!"
கௌதம புத்தர்





# சாய்ந்தமருது பாடசாலைக்கு கதிரைகள்!

(எம்.எம்.றம்ஸீன்)

சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலய கூட்ட மண்டபத்துக்கு நீண்ட நாள் தேவையாக இருந்த ஒரு தொகுதி பிளாஸ்ரிக் கதிரைகள் பொறியியலாளர் உதுமான் கண்டு நாபீரின் சொந்த நிதியின் மூலம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக நாபீர் நிதியத்தின் ஸ்தாபகரும், பொறியியலாளரும், ஜலால் வித்தியாலய பழைய மாணவருமான கலாநிதி உதுமான்கண்டு நாபீர் கலந்து கொண்டு கதிரைகளை வழங்கினார்.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாபிர் பௌண்டேசன் பணிப்பாளர் உதுமான் கண்டு நாபிர் மேற்கொள்ளப்பட்டு வரும் சமூக சேவைகளைப் பாராட்டி பாடசாலை அதிபர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் கௌரவ அதிதியாக பாடசாலையின் பழைய மாணவர் சங்கச் செயலாளர் பொறியியலாளர் றியாஸ் கலந்து கொண்டார்.

பிரதி அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# பொத்துவில் விவசாயப் பகுதிகளில் 9 வீதிகளை புனரமைக்க நடவடிக்கை





(கே. எ. ஹமீட்)

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரபின்ன் பெரும் முயற்சியால் பொத்துவில் விவசாயப் பகுதிகளில் உள்ள 9 வீதிகளை புனரமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிராமிய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சின் ஊடாக இப்பபாதைகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

றொட்டை போட்டா வீதி இரண்டு கிலோ மீற்றர் வீதியாகவும், ஒடகோவை குளத்துவட்டை வீதி இரண்டு கிலோ மீற்றர் வீதியாகவும் புனரமைக்கப் படவுள்ளது. இதனுடன் இணைந்ததாக மேலும் ஏழு வீதிகள் புனரமைக்கப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது.



வீதிப் புனரமைப்பு நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பொத்துவில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலை வருமான சட்டத்தரணிஎஸ்.எம்.எம்.முசாரப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பொத்துவில் பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஏ.எல். நியாஸ், ஜம்இய்யத்துல் உலமா சபையின் பொத்துவில் கிளையின் தலைவர் மௌலவி முகைதீன் பாவா, நாடாளுமன்ற உறுப்பினரின் மக்கள் தொடர்பாடல் அதிகாரி அஸாம் அப்துல் அஸீஸ் மற்றும் இணைப் பாளர்கள், விவசாய அமைப்புகளின் தலைவர்கள், விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



# பால்நிலை சமத்துவம் தொடர்பில் செயலமர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியத்தால் பால்நிலை மற்றும் பால் நிலை அடிப்படையிலான வன்முறை பற்றி பிரச்சினைகள், சட்டங்கள் மற்றும் கருத்தியல் தெளிவாக அதிகரித்த புரிதலைப் பற்றிய இரண்டு நாள் வதிவிடப் பயிற்சி நெறி அகில இலங்கை வை.எம்.எம்.ஏ மற்றும் வை.டபிள்யூ. எம்.ஏ. அங்கத்தவர்களுக்கு முதலவது நாள் மெரியோட் கொழும்பு சீற்றி சென்டரிலும், இரண்டாவது நாள் கொழும்பு மூவுன்பிக் ஹோட்டலிலும் நடைபெற்றது.



# மயோன் முஸ்தபா ஞாபகார்த்தக் கிண்ணம் உத்தியோகபூர்வ அங்குரார்ப்பணம் நிறைவு!

(யூ.கே. காலித்தீன்)

சாய்ந்தமருது ஒஜி விளையாட்டுக் கழகம் மயோன் ரேட் எக்ஸ்சேன்ஸ் நிறுவனத்தின் பூரண அனுசரணையுடன் நடத்தும் மாபெரும் கடினப் பந்து சுற்றுப் போட்டி எதிர்வரும் ஜனவரி மாதம் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப் படவுள்ளது.

இதற்கான உத்தியோகபூர்வ அங்குராப்பண நிகழ்வு (25) ஆம் திகதி மயோன் ரேட் எக்ஸ்சேன்ஸ் நிறுவனத்தின் தவிசாளர் ரிஸ்லி முஸ்தபாவின் அலுவலகத்தில் அவரது பங்குபற்றுதலுடன், ஓஜி விளையாட்டுக் கழகத்தின் நிர்வாக உறுப்பினர்கள், சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் ஆகியோரின் பிரசன்னத்துடனும் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் மறைந்த முன்னாள் உயர்கல்விப் பிரதி அமைச்சர் மர்ஹூம் மயோன் முஸ்தபாவின் பெயரில் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை ஓஜி விளையாட்டுக் கழகம் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்துவது என்று தீர்மானிக்கப் பட்டது. இதற்கான அனுசரணையை மயோன் ரேட் எக்ஸ் சேன்ஸ் நிறுவனத்தின் தவிசாளர் ரிஸ்லி முஸ தபா வழங்குகின்றார்.

இச்சுற்றுப்போட்டியானது எதிர்வரும் 2024 ஜனவரி மாதம் 14 ஆம் திகதி ஆரம்பிக்க வுள்ளது.

பிராந்தியத்தின் அணிகள் பங்குபற்ற வுள்ள இந்தச் சுற்றுப் போட்டியின் ஏனைய விவரங்கள் மிகவும் விரைவில் அறிவிக்கப்படும் என ஓஜி அமைப்பின் தவிசாளர் ஏ.எம். நஜா தெரிவித்தார்.

# கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தாய்லாந்தின் முன்னாள் பிரதமருடன் சந்திப்பு

(ஹஸ்பர்)

தாய்லாந்துக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமானை அந்த நாட்டின் முன்னாள் பிரதமர் கொர்ன் டபரன்சியை மரியாதை, நட்பு ரீதியாகவும் நேரில் சென்று வரவேற்றதுடன், இரு நாட்டு நட்புறவை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடினர். இலங்கை பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீண்டெழ தாய்லாந்து முழு ஆதரவையும் வழங்கும் என கொர்ன் டபரன்சி கிழக்கு மாகாண ஆளுநரிடம் உறுதியளித்தார்.



தாய்லாந்தில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் போது அந்த நாட்டை மீட்டெடுக்க சுற்றுலா துறை முக்கிய பங்களித்தது என முன்னாள் பிரமர் கொர்ன் டபரன்சி தெரிவித்ததோடு, தாய்லாந்தில் சுற்றுலா துறையில் காணப்படும் வெற்றிக்கான கொள்கை குறித்து முன்னாள் பிரமர் விளக்கம் அளித்தார்.

முன்னாள் பிரமர் கொர்ன் டபரன்சி இலங்கைக்கு வருகை தருமாறு செந்தில் தொண்டமான் அழைப்பு விடுத்தார். அவ்வழைப்பை ஏற்று எதிர்வரும் பெப்ரவரி மாதம் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்வதாக முன்னாள் பிரதமர் கொர்ன் டபரன்சி ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் உறுதியளித்தார்.



# அக்கரைப்பற்று ஷறாவின் வருடாந்த இறுதி நிகழ்வு

(எம்.எப்.எம்.நவாஸ்)

அக்கரைப்பற்று ஷறா கிற் முன்பள்ளியின் வருடாந்த இறுதி நிகழ்வு அக்கரைப்பற்று அஸ்ஸிறாஜ் மகாவித்தியாலயத்தில் முன்பள்ளிப் பாடசாலை தலைவர் எம்.எச்.எம்.அஜிறுஸ் மௌலவி தலைமையில் நடைபெற்றது

இதன் போது மாணவ மாணவிகளின் கலைநிழச்சிகள் அரங்கேற்றப்பட்டது .

இந்நிகழ்வில் விருந்தினர்களா அதிபர் ஏ.ஜீ.பஸ்மில் மற்றும் என்.ரீ.மசூர், எஸ்.எம். அப்துல் அமீன், ஏ.எல்.எம்.சர்ஜூன், யூ.எல். ஆரிபீன் ஆகியோரு ம் கலந்து கொண்டனர். இப்பாடசாலையில் பாடசாலைக்கல்வியுடன் மார்க்க கல்வியும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.








# ‘யாழில் மலையகத்தை உணர்வோம்’ மக்களை அழைக்கும் சிவில் சமூகம்

மலையகம் -200, “யாழில் மலையகத்தை உணர்வோம்” என்ற தொனிப் பொருளின் கீழ் எதிர்வரும் நவம்பர் 30, டிசம்பர் 1, 2 ,3 ஆகிய தினங்களில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெறவுள்ள நிகழ்வில் வடக்கு வாழ் மக்கள் கலந்துக் கொள்ள வேண்டும் என்று யாழ். சிவில் சமூக நிறுவனங்கள் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் யாழ். சிவில் சமூக நிறுவனங்கள் கூட்டாக அழைப்பு விடுத்தன.

விசேட அமர்வுகளாக அரசியல் களம், புலமைக்களம் மற்றும் ஆற்றுகைக்களம் எதிர்வரும் டிசம்பர் 2ஆம் திகதி காலை 9 மணிக்கு தந்தை செல்வா அரங்கில் இடம்பெற உள்ளன.

மலையக மக்களின் வாழ்வு, சவால்கள், அடைவுகள் மற்றும் நிலைமை என்பவற்றை பிரதிபலிக்கும் நடமாடும் அருங்காட்சியகம், கண்காட்சி, கலை நிகழ்வுகள், ஆவண திரையிடல், அரசியல், புலமை பகிர்வு மற்றும் ஆற்றுகை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

மலையகத்தின் 200 வருடகால வரலாற்றுப் பயணத்தை உணர்ந்து கொள்ளவும், மலையக மக்கள் எதிர்பார்க்கும் அடைவுகளை பெற உணர்வு ரீதியாக ஆதரவளிக்கவும், அவர்களின் முன்னெடுப்புக்களில் பங்குகேற்கவும் இந்த ஒன்று கூடல் வழி செய்யும்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு தொழில் நிமித்தம் அழைத்து வரப்பட்ட மலையக மக்களின் வரலாறு 200 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. காலம் மாறினாலும் மலையக மக்களின் வாழ்க்கை தரம் இன்றும் திருப்தியளிக்கக் கூடிய அளவுக்கு முன்னேற்றமடையவில்லை. கல்வி, சுகாதாரம், அரசியல் ஆகிய அடிப்படை காரணிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் லயன் வாழ்க்கை இன்றும் ஒரு நினைவுச் சுவடாகவே காணப்படுகிறது.

உரிமை சார் விடயங்கள் மற்றும் அடிப்படை தேவைகளை பெற்றுக்கொள்ளல் இன்னும் பெரிய வெற்றிடமாகவே உள்ளது. இதனை அடிப்படையாக கொண்டு, மலையகத்தையும் மக்களையும் புரிந்து கொண்டுள்ளோம் எனும் ஒத்துணர்வை வெளிப்படுத்த யாழ். மாவட்டத்திலும் வடக்கிலும் உள்ள மக்கள் முக்கியமாக இளையோர் “யாழில் மலையகத்தை உணர்ந்து கொள்வோம்” நிகழ்வுக்கு வரவேற்கப் படுகின்றனர்.

பாடசாலைகள், பல்கலைக்கழக, உயர்கல்வி நிறுவன மாணவர்கள் நவம்பர் 30 இல் இருந்து டிசம்பர் 3 வரை இக் கண்காட்சி, பகிர்வு மற்றும் கலை நிகழ்வுகளில் கலந்து கொள்ள முடியும்.

கண்காட்சி (ஓவியம், டிஜிட்டல் திரை, காணொளி), மனித நூலகம்,சிறுவர் நாடகங்கள்,டிஜிட்டல் ஆவணக் கண்காட்சி, ஆவணப்பட திரையிடல், வாழ்வியல் பகிர்வுகள், சமூக செயற்பாட்டு பகிர்வுக்களம், புகைப்படக்கண்காட்சி, நூல் கண்காட்சி,ஊடக பகிர்வுக்களம், மலையக புள்ளிவிவரப் பகிர்வுத்தளம் அரசியல் பகிர்வுக்களம், புலமை பகிர்வுக்களம், ஆற்றுகைப் பகிர்வுக்களம் என்பன இடம்பெறவுள்ளது.

# மாணவர்களது திறமைகளை வெளிக்கொணர்ந்த கண்காட்சி

(எம்.ஏ.ஏ.அக்தார்)

காத்தான்குடி கல்வி கோட்ட பணிமனை ஏற்பாட்டில் மாணவர்களின் புத்தாக்க கண்காட்சி காத்தான்குடி ஜாமியுழ்ழாபிரீன் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் புத்தாக்கக் கண்காட்சியில் பாடசாலை மாணவர்களின் ஆக்க , ஆராய்ச்சிகளின் ஊடாகப் வகையான கண்டுபிடிப்புகள் வைக்கப்பட்டிருந்தன.

காத்தான்குடி கோட்டக்கல்வி பணிப்பாளர் ஏ.ஜே.எம். ஹக்கீம் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப வைபவத்தில் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி பணிப்பாளர் அமீர் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

இதில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் கல்வி அதிகாரிகள், காத்தான்குடி பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிரமுகர்கள் எனபலரும் கலந்து கொண்டனர்

இந்தப் புத்தாக்க கண்காட்சியில் காத்தான்குடி கல்வி கோட்டத்திலுள்ள 22 பாடசாலைகளை சேர்ந்த 350 மாணவர்களின் கண்டுபிடிப்புகள் வைக்கப்பட்டிருந்தன.

காத்தான்குடி கல்வி கோட்ட மட்டத்தில் நடைபெறும் இந்த புத்தாக்க கண்காட்சிகளை காத்தான்குடியில் உள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் பார்வையிட்டு வருகின்றனர்.

புதிய கல்விச் சீர்திருத்த திட்டத்துக்கு அமைவாக மாணவர்களை தயார் படுத்தும் நோக்கில் இந்த புத்தாக்க கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

# கல்முனை கடற்கரையில் பொதுக்கிணறு அமைப்பு!

(எம்.எம்.றம்ஸீன்)

மீனவ ர்களது பாவனைக்கென சாய்ந்த மருது, கல்முனை கடற்கரைப் பிரதேசத்தில் றிஸ்லி முஸ்தபா கல்வி அபிவிருத்தி மற்றும் சமூக அமைப்பால் பொதுக்கிணறு அமைத்து திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சாய்ந்துமருது, கல்முனை பிரதேச மீனவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க கல்முனை ஸாஹிரா கல்லூரிவீதி சந்தியில் கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் இது அமைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் எம்.றிஸ்லி முஸ்தபா மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.



# மருதூர்க் கொத்தனின் ‘அதிமதுரம்’ நூல் வெளியீட்டு விழா கண்டியில்!

கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் மற்றும் மலையக கலை கலாசார (இரத்தின தீபம்) சங்கம் இணைந்து நடத்தும் கலாநிதி செ. சுதர்சன், சிரே ஷ்ட ஊடவியலாளர் இக்பால் அலி ஆகியோரைப் பதிப்பாசிரியராக் கொண்டு வெளிவந்த “மருதூர்க் கொத்தனின் அதிமதுரம் குறுநாவல் என்னும் நூல் வெளியீட்டு விழா கண்டி எஸ். சேனநாயக வீதியில் கண்டி அசோகா வித்தியாலத்திற்கு முன்னால் அமைந்துள்ள செல்லத்ரை ஞாபகார்த்த மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ,டம்பெறவுள்ளது.

மலையக கலை கலாசார சங்கத்தின் தலைவர் எஸ். பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளஇந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் துரை மனோகரன் கலந்து கொள்வார்.

வரவேற்பு உரையைக் கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் இரா. அ இராமன் நிகழ்த்த நூல் வெளியீட்டு உரையை கலாநிதி செ. சுதர்சனும் ஆய்வுரையைப் பேராதனை பல்கலைக் கழக தமிழ்த் துறை உதவி விரிவுரையாளர் வி. சாரங்கனும் நிகழ்த்தவுள்ளனர்.

இறுதியாக நூலின் பதிப்பாசிரியர்களுள் ஒருவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான இக்பால் அலி நன்றியுரை நிகழ்த்துவார்.




வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VAN RENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882



# தமிழர் வரலாறு கூறும் புதிய கல்வெட்டுகள் திருகோணமலையில்...!

■ எஸ்.கீதபொன்கலன்

இலங்கைத் தமிழர் வரலாறு பற்றி இதுவரை அறியப்படாத புதிய கல்வெட்டு திருகோணமலையில் கண்டுபிடிப்பு.

தமிழ் இராச்சியத்தின் தோற்றம் பற்றிய முன்னைய வரலாற்று பார்வையை மீள்வாசிப்பிற்கு உற்படுத்தும் அரிய தமிழ் கல்வெட்டு திருகோணமலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள கி.பி.13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த இக்கல்வெட்டு இலங்கைத் தமிழர் வரலாறு பற்றி இதுவரை அறியப்படாதிருந்த புதிய பல வரலாற்று உண்மைகள் கூறுகின்றது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில்,

புகைபடர்ந்திருக்கும் இலங்கைத் தமிழரின் ஆதிகால, இடைக்கால வரலாற்றுக்குப் புது வெளிச்சமூட்டி வருவதில் தொல்லியற் கண்டுபிடிப்புக்களுக்கு முக்கிய இடமுண்டு.

அந்தக் கண்டுபிடிப்புக்களில் கல்வெட்டுக்கள் நம்பகரமான முக்கிய சான்றுகளாகப் பார்க்கப்படுகின்றன.

அவை இலக்கியங்களைப் போல் விரிவான வரலாற்றுச் செய்திகளைத் தராவிட்டாலும் அவை வரலாற்றுச் சம்பவங்கள் நடந்த சமகாலத்திலேயே பெரும்பாலும் எழுதப்பட்டிருப்பதால் அவற்றில் இருந்து அறியப்படும் வரலாற்றுச் செய்திகள் நம்பகரமானதாகவே பார்க்கப்படுகின்றன.

இவை ஒரு நாட்டில் வாழும் பல இன மக்கள் பற்றிய பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகளை மீளாய்வு செய்வதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இதற்கு திருகோணமலை மாவட்டத்தில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டையும் உதாரணமாகக் குறிப்பிடலாம்.

முதலில் இந்தக் கல்வெட்டுப் பற்றிய செய்தி திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் என்பவரால் வைத்திய கலாநிதி த.ஜீவராஜிக்குத் தெரியப்படுத்தப்பட்டதன் மூலம் அது பற்றிய தகவல் எமக்கும் பரிமாறப்பட்டது.

அவர்கள் அனுப்பிய புகைப்படத்தைப் பார்த்து இக்கல்வெட்டின் முக்கியத்துவத்தைத் தெரிந்துகொண்ட நாம் அக்கல்வெட்டை ஆய்வு செய்வதற்கு தொல்லியற் திணைக்கள பணிப்பாளர்



நாயகத்தின் அனுமதியைப் பெற்று யாழ்ப்பாணப் பிராந்திய தொல்லியற் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர்களான பா.கபிலன், வி. மணிமாறன் மற்றும் முன்னாள் தொல்லியல் விரிவுரையாளர் க.கிரிகரன் ஆகியோருடன் திருகோணமலை சென்றிருந்தோம்.

இந்நிலையில் திருகோணமலை மாவட்ட வரலாற்றுச் சின்னங்களைக் கண்டறிந்து பாதுகாப்பதில் அதிக அக்கறையுடன் செயற்பட்டுவரும் வைத்திய கலாநிதி த.ஜீவராஜுடன் வைத்திய கலாநிதி அ.ஸதீஸ்குமார், கிராம உத்தியோகத்தர் நா.சந்திரசேகரம் மற்றும் கோமரன்கடவல பிரதேச செயலக



உத்தியோகத்தர் நா.ஜெகராஜ் ஆகியோரும் கல்வெட்டைப் படியெடுக்கும் பணியில் ஆர்வத்துடன் இணைந்து பணியாற்றியமை எமக்கு மனமகிழ்வைத் தந்ததுடன், அச்சமற்ற சூழ்நிலையில் இக்கல்வெட்டைப் படியெடுக்கவும் வாய்ப்பாக இருந்தது.

இக்கல்வெட்டு திருகோணமலை நகரில் இருந்து ஏறத்தாழ 50 கிலோ மீற்றர் தொலைவில் திருகோணமலை மாவட்டத்தில் தனி நிர்வாகப் பிரிவாக உள்ள கோமரன்கடவல பிரதேசத்தில் உள்ள முக்கிய வீதியுடன் இணைந்திருக்கும் காட்டுப்பகுதியில் காணப்படுகின்றது.

முன்னர் இப்பிரதேசம் கட்டுக்குளப் பற்று நிர்வாகப் பிரிவாக இருந்த போது இந்த இடம் குமரன்கடவை எனவும் அழைக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது.

இங்குள்ள காட்டுப்பகுதியில் கல்வெட்டுடன் அதன் சமகாலத்திற்கு உரிய அழிவடைந்த சிவாலயமும், அதன் சுற்றாடலில் அழிவடைந்த கட்டட அத்திபாரங்களும் காணப்படுகின்றன.

அவற்றுள், அழிவடைந்த சிவாலயம் அதே நிலையில் தொல்லியற் திணைக்களத்தால் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாலயத்திற்கு மிக அருகிலுள்ள சிறு மலையிலேயே கல்வெட்டும் காணப்படுகின்றது.

இம்மலையின் மேல்பகுதியில் திருவாசிபோன்ற வட்டமும், அதனுடன் இணைந்த ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கமும் செதுக்கப்பட்டுள்ளன.

சிவலிங்கத்துக்கு மேலிருக்கும் வட்டம் சக்தி வழிபாட்டு மரபுக்கு உரிய சக்கரமாக இருக்கலாம் எனப் பேராசிரியர் பொ.இரகுபதி குறிப்பிடுகின்றார்.

இக்குறியீடுகளுக்கு கீழே 22 வரிகளில் தமிழ்க் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது.

முதல் இரு வரிகளும், ஏனையவற்றில் சில சொற்களும் சமஸ்கிருதத்தில் இருக்கின்றன.

கல்வெட்டின் வலப்பக்கத்தில் உள்ள பல எழுத்துப் பொறிப்புக்கள் மலையின் மேற்பகுதியில் இருந்து கீழ்நோக்கி வழிந்தோடும் நீரால் சிதைவடைந்தும், தெளிவற்றும் காணப்படுகின்றன.

இடப்பக்க எழுத்துப் பொறிப்புக்கள் தெளிவாகக் காணப்பட்டதால் கல்வெட்டைப் படியெடுத்தவர்கள் ஆர்வமிகுதியால் பல சொற்களைப் படித்தனர்.

ஆயினும் கல்வெட்டின் ஒரு பாகம் தெளிவற்றுக் காணப்பட்டதால் அது கூறும் வரலாற்றின் முழுமையான உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இதனால் தென்னாசியாவின் முதன்மைக் கல்வெட்டு அறிஞரும், எனது கலாநிதிப்பட்ட ஆய்வு மேற்பார்வையாளருமான பேராசிரியர் வை.சுப்பராயலுவுக்கும், தமிழக தொல்லியற் துறையின் முன்னாள் மூத்த கல்வெட்டறிஞரான கலாநிதி சு.இராஜகோபாலுக்கும் இக்கல்வெட்டுப் படிகளின் புகைப்படங்களை அனுப்பி வைத்தேன்.

அவர்கள் இருவரும் ஒருவார காலமாக கடும் முயற்சி செய்து கல்வெட்டின் பெரும்பகுதியை வாசித்து அதன்

(14ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் வரலாறு கூறும் புதிய கல்வெட்டுகள் திருகோணமலையில்...!

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாசகத்தை தற்போது எமக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அதன் வாசகம் பின்வருமாறு,

01)... ... க்ஷகே ஸ்ரீவிம்ஜங்கோ3ஸ நௌ ம்ருகே3 விம்ச திப4.

02).... .....சக்தி ப்ரதிஷ்டா 2ம் கரோத் க்ருதி: ஸ்வஸ்தி ஸ்ரீ ...

03) ஜத்திகள்? ஜஸ்ரீகுலோஸ த்துங்கசோழக் காலிங்கராயநேன் ஈழஜம

04) மண்டலமான மும்முடிஸ சோழ மண்டல மெறிந்தும் கங்கராஜ காலிங்க வி–

05) ஜயவாகு தே3வற்கு வீராபி4 ஷேகம் பண்ணுவித்து அநந்தரம் அஷ்ட–

06) ஜநேமி பூசை காலஸங்களில் ஆதி3க்ஷேத்ரமாய் ஸ்வயம்பு வுமாந திருக்கோ–

07) ஜயிலைஸயுடைய நாயநாரை தெ3ண்டன் பண்ணி இன்னாய–

08) நாற்கு சஜக்திஸ ப்ரதிஷ்டையில்லா மையில் திருக்காமக்கோட்ட நா

09) ச்சியாரை எழுந்தருளிவித்துத் திருப்ரதிஷ்டை பண்ணுவித்து நமக்கு ஜப்

10) ராப்தமாய்ஸ வருகிற காலிங்கராயப் பற்றில் மாநாமத்ஜதுஸ நாட்டில் ல–

11) ச்சிகாஜதிஸபுரம் இதுக்குள் நாலூ ர் வேச்சர்களுள்ளிட்ட நில–

12) மும் . . .றிதாயாளமு . . .ட்டும் இதில் மேநோக்கிய

13) மரமும் கீநோக்கிய கிணறும் பேருடரை நீக்கி குடிமக்களுள்பட

14) இந்நாஜச்சியார்க்கு திருபப்ஸ படிமாற்றுக்கும் மண்டபக் கொற்று–

15) க்கும்சாந்த்3ராதி3த்தவரையும் செல்லக் கடவதாக ஹஸ்தோதகம் ப–

16) ண்ணிக் குடுத்தேன்இ .... லுள்ளார ழிவு படாமல்

17) ...ண்ண..ட்ட......ப் பெறுக்கிவுண் டார்கள் ஜஆஸய்

18) நடத்தவும் இதுக்கு . . . . ண்டாகில் காக்கையும் நாயும்

19) மாக . . டையார் பி... கெங்கைக் கரையிலாயிரங்

20) குரால் பசுவைக் கொன்றாஜர் பாவங்ஸ கொண்டார்கள் ஆயிரம் ப்3ரா–

21) ஹ்மணரைக் கொன்றார் பாவஜங் கொண்ஸடார்கள் மேலொரு ...

22) மாற்றம் விலங்குரைப்பார்.. காலிங்கராயரின் ஜசொல்படிஸ ...

23) த்தியஞ் செய்வார் செய்வித்தார் கி.பி.13 ஆம் நூற்றாண்டின் முற் பகுதியைச் சேர்ந்த இக்கல்வெட்டுப் பற்றிய தமிழக அறிஞர்களின் வாசிப் பிலிருந்து இலங்கைத் தமிழர் வரலாறு பற்றி இதுவரை அறியப் படாதிருந்த புதிய பல வரலாற்று உண் மைகள் தெரியவந்துள்ளன.

அவை சோழர் ஆட்சியிலிருந்து ஐரோப்பியர் காலம்வரை தமிழர் பிராந்தி யங்களின் ஆட்சியுரிமை, நிர்வாக ஒழுங்கு என்பன தனிப்போக்குடன் வளர்ந்தமையைக் கோடிட்டுக் காட்டுவ தாக உள்ளன.

மேலும் யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றகாலப் பின்னணி, அது தோன் றிய காலம், தோற்றுவித்த வம்சங்கள் தொடர்பான முன்னைய வரலாற்றுப் பார்வையை மீளாய்வு செய்வதிலும், தெளிவுபடுத்துவதிலும் இக்கல்வெட்டு அதிக முக்கியத்துவம் பெறுகின்றது.

இக்கல்வெட்டுப் படியெடுத்த காலப்



பகுதியிலேயே இக்கல்வெட்டின் புகைப் படங்களை எனது ஆசிரியர்களான பேராசிரியர் கா.இந்திரபாலா, பேராசிரி யர் சி.பத்மநாதன், பேராசிரியர் பொ.இரகுபதி ஆகியோருக்கு அனுப்பி அவர்களின் கருத்துக்களைப் பெற்றிருந தேன்.

பேராசிரியர் இரகுபதியால் கல் வெட்டின் சில பாகங்கள் வாசிக்கப்பட்டு அதற்குரிய பொருள் விளக்கத்தையும் அவர் அவ்வப் போது எனக்கு தெரியப் படுத்தியிருந்தார்.

இந்நிலையில் தமிழக அறிஞர்க ளால் பெருமளவு வாசித்து முடிக்கப்பட்ட கல்வெட்டு வாசகத்துக்கு மேற்கூறிய அனைவருமே வழங்கிய கருத்துக்கள், விளக்கங்கள் என்பன இலங்கைத் தமிழர் வரலாற்றுக்குப் புதிய செய்திக ளைச் சொல்வதாக உள்ளன.

தென்னிந்தியாவில் நீண்டகால வரலாறு கொண்டிருந்த சோழ அரசு தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு பத்தாம் நூற்றாண்டிலிருந்து ஒரு பேரர சாக எழுச்சியடைந்த போது அவ்வரசின் செல்வாக்கால் சமகால இலங்கை வரலாற்றிலும் பல மாற்றங்கள் ஏற் பட்டன.

இதனால் தமிழ் நாட்டு அரச வம்சங் களை வெற்றி கொண்டதன் பின்னர் சோழர்கள் இலங்கைக்கு எதிராகவும் படையெடுத்து வந்தனர்.

இது முதலாம் பராந்தகசோழன் காலத்தில் ஆரம்பித்துப் பின்னர் இராஜ ராஜசோழன் காலத்தில் கி.பி. 993 இல் இலங்கையின் வடபகுதி வெற்றி கொள்ளப்பட்டது.

கி.பி. 1012 இல் முதலாம் இராஜேந் திர சோழன் காலத்தில் இலங்கை முழுவதும் வெற்றி கொள்ளப்பட்டு புதிய தலைநகரம் ஜனநாதபுரம் என்ற பெய ருடன் பொலன்னறுவைக்கு மாற்றப் பட்டதாக சோழர்காலச் சான்றுகளால் அறிகின்றோம்.

சோழரின் 77 ஆண்டுகால நேரடி ஆட்சியில் அவர்களது நிர்வாக முறையே பின்பற்றப்பட்டது.

இதன்படி இலங்கை மும்முடிச் சோழ மண்டலம் என்ற பெயரைப் பெற்றதுடன் வளநாடு, நாடு, ஊர் போன்ற நிர்வாக அலகுகளும் இங்கு பின்பற்றப்பட்டன.

திருகோணமலையில் மட்டுமே ஐந்து வளநாடுகள் இருந்துள்ளன.

அத்துடன் சோழரின் அரசியல், இராணுவ, நிர்வாக நடவடிக்கைகளின் முக்கிய மையமாக திருகோணமலை இருந்ததை அவர்களின் ஆட்சிக்கால ஆதாரங்களும் உறுதிப்படுத்துகின்றன.

பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்ட சோழரின் ஆட்சி கி.பி.1070 இல் வீழ்ச்சியடைந் தாலும் சோழரின் ஆதிக்கம், நிர்வாக முறை, பண்பாடு என்பன தமிழர் பிராந்தியங்களில் தொடர்ந்திருக்கலாம் எனக் கருதமுடிகின்றது.

இதை உறுதிப்படுத்தும் புதிய சான் றாகவே கோமரன்கடவலக் கல்வெட்டுக் காணப்படுகின்றது.

பொலன்னறுவையில் சிங்கள மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டு ஏறத்தாழ 125 ஆண்டுகளின் பின்னரும் தமிழர் பிராந்தியங்களில் மும்முடிச் சோழ மண்டலம் என்ற நிர்வாகப் பெயரும், தமிழ் நிர்வாக முறையும் இருந்தன என்ற புதிய செய்தியை இக்கல்வெட்டுத் தருகின்றது.

கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட காலத் தில் இப்பகுதியில், சோழர் ஆட்சிக்குப் பொறுப்பாக மூன்றாம் குலோத்துங்க சோழனது படைத்தளபதிகளுள் ஒருவ னான அல்லது அரச பிரதிநிதியான குலோத்துங்கசோழக் காலிங்கராயன் இருந்துள்ளான் என்ற புதிய செய்தியும் தெரியவருகின்றது.

மேலும் இவனே கங்கராஜகாலிங்க விஜயபாகுவுக்கு (கலிங்கமாகனுக்கு) பட்டாபிஷேகம் செய்தான் என்ற அதி முக்கிய புதிய வரலாற்றுச் செய்தியும் இக்கல்வெட்டிலேயே முதல் முறையாகச் சொல்லப்பட்டுள்ளது.

பேராசிரியர் சுப்பராயலு இக்கல் வெட்டில் (வரிகள் (3-5) வரும் ‘ஸ்ரீ குலோத்துங்கசோழக் காலிங்கராய நேன் ஈழமண்டலமான மும்முடி சோழ மண்டல மெறிந்தும் கங்கராஜ காலிங்க விஜயவாகு தேவற்கு வீராபிஷேகம்’ என்ற சொற்தொடரை புதிய செய்தி எனக் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் இந்திரபாலா இத்தொட ரில் உள்ள கங்கராஜ காலிங்க விஜய வாகு என்பவன் 1215 இல் பொலன் னறுவை அரசை வெற்றி கொண்டு ஆட்சி செய்த கலிங்கமாகன் (மாகன் மாகோன்) என அடையாளப்படுத் துகின்றார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் வரலாறு கூறும்..

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவன் விஜயபாகு என்ற பெயராலும் அழைக்கப்பட்டான் என்பதற்கு 14 ஆம் நூற்றாண்டில் எழுந்த நிகாயசங்கிரஹய என்ற சிங்கள இலக்கியத்தில் வரும் குறிப்பை முக்கிய ஆதாரமாகக் காட்டியுள்ளார்.

இவற்றிலிருந்து, இலங்கையை வெற்றிகொண்டு பொலன்னறுவையில் ஆட்சிபுரிந்த கலிங்கமாகன், குலோத்துங்கசோழ காலிங்கராயனால் அபிஷேகம் செய்யப்பட்டு ஆட்சியில் அமர்த்தப்பட்டவன் என்ற புதிய ஆதாரம் கிடைத்துள்ளது.

இக்கல்வெட்டில் கூறப்படும் குலோத்துங்கசோழக் காலிங்கராயன் மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் இருந்த சோழப் படைத் தளபதியாக அல்லது சோழ அரசப் பிரநிதியாக இருந்திருக்க வேண்டும்.

ஏனெனில் மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1178-1218) அவன் இலங்கை மீது படையெடுத்து சில வெற்றிகளைப் பெற்றதாக அவனது பத்தாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் கூறுகின்றது.

இங்கே கலிங்கமாகன் பொலன்னறுவை இராச்சியத்தை கி.பி.1215 இல் வெற்றி கொண்டான் எனக் கூறப்படுகிறது.

இதனால் குலோத்துங்க சோழ காலிங்கராயனால் கலிங்கமாகனுக்கு நடத்தப்பட்ட பட்டாபிஷேகம் மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சியின் இறுதிக் காலப் பகுதியில் நடந்ததெனக் கூறமுடியும்.

பொலன்னறுவை இராசதானியில் நிஸங்கமல்லன் ஆட்சியைத் தொடர்ந்து பல குழப்பங்களும், அயல் நாட்டுப் படையெடுப்புக்களும் ஏற்பட்டதை பாளி சிங்கள இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

இந்த நிலையில் சோழ, கேரள, தமிழ்ப்படை வீரர்களின் உதவியுடன் இலங்கை மீது படையெடுத்து வந்த கலிங்கமாகன் 1215 இல் பொலன்னறுவை இராசதானியைக் கைப்பற்றி 44 ஆண்டுகள் வரை ஆட்சி செய்தான் என்ற வரலாறு காணப்படுகின்றது.

இவனது ஆட்சியில் வெறுப்படைந்த சிங்கள மக்களும், சிங்கள தலைநகரும் தெற்கு நோக்கி இடம்பெயர்ந்த போது கலிங்கமாகன் தலைமையில் வடக்கே இன்னொரு அரசு தோன்றியதாக சூளவம்சம், ராஜவெலிய முதலான வரலாற்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

ஆயினும் இக்கலிங்கமாகன் யார்? எந்த நாட்டிலிருந்து படையெடுத்து வந்தவன் என்பதையிட்டு இதுவரை அறிஞர்கள் மத்தியில் வேறுபட்ட கருத்துக்களே இருந்துள்ளன.

சில அறிஞர்கள் இவனை மலேசியா நாட்டிலுள்ள கலிங்கத்திலிருந்து படையெடுத்தவன் எனவும் கூறியுள்ளனர்.

இந்த நிலையில் தற்போது கிடைத்துள்ள கல்வெட்டில் கலிங்கமாகன் கங்கை வம்சத்துடனும், கலிங்க நாட்டுடனும் தொடர்புடையவன் என்ற புதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

சோழர்கள் தம் திருமண உறவுகளால் கீழைச்சாளுக்கியரது (வேங்கி அரசு) கங்கை வம்சத்துடனும், படையெடுப்புகள் மூலம் கலிங்க நாட்டுடனும் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதைக் கலிங்கத்துப்பரணியும், சோழக் கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன.

யாழ்ப்பாணத்தில் அரசமைத்த ஆரியச்சக்கரவர்த்திகளும் கங்கை வம்சத்துடன் தொடர்புடையவர்கள் என அவ்வரசு தொடர்பாக எழுந்த இலக்கியங்கள் கூறுகின்றன.

இவ்வாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாண அரசின் தோற்றத்தை கலிங்கமாகனுடன் தொடர்பு படுத்தி பேராசிரியர் இந்திரபாலாவால் எழுதப்பட்ட அரிய கட்டுரை ஒன்று தற்போது எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக்கட்டுரையை மக்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் இலங்கை ஊடகங்களில் விரைவில் பிரசுரமாக இருப்பது இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இக்கல்வெட்டின் 8-10 வரிகளில் வரும் ‘திருக்காமக்கோட்ட நாச்சியாரை எழுந்தருளிவித்துத் திருப்ரதிஷ்டை பண்ணுவித்து’ என்ற சொற்தொடர் இப்பிரதேசத்தில் சக்திக்கென தனிக் கோவில் (காமக்கோட்டம்) அமைக்கப்பட்ட புதிய செய்தியைக் கூறுவதாக உள்ளது.

பேராசிரியர் பத்மநாதன் இது போன்ற செய்தி இலங்கையில் கிடைத்த பிற தமிழ்க் கல்வெட்டுகளில் இதுவரை காணப்படவில்லை எனக் குறிப்பிடுகின்றார்.

தமிழகத்தில் இரண்டாம் இராஜராஜ சோழன் காலத்தில் இருந்து சிவன் கோயிலுக்குப் பக்கத்தில் சக்திக்கு தனிக்கோயில் அமைக்கும் மரபு இருந்தமை தெரிகின்றது .

அம்மரபு சமகாலத்தில் இலங்கையிலும் பின்பற்றப்பட்டமைக்கு இக்கல்வெட்டு சான்றாகும்.

கோமரன்கடவல சிவன் கோயில் குலோத்துங்கசோழக் காலிங்கராயன் காலத்திற்கு முன்பே பன்நெடுங்காலமாக இருந்திருக்கின்றது என்பதும் கல்வெட்டில் வரும் ஆதிக்ஷேத்ரம் என்ற சொற்தொடரால் தெரிகின்றது.

காலிங்கராயன் ஈழத்தை வெற்றி கொண்டதற்கும் கலிங்கமாகனுக்குப் பட்டம் சூட்டியதற்கும் பிறகு இக்கோயிலுக்கு வந்து வழிபட்டு, சக்திக்காக தனிக் கோயில் எடுப்பித்து, தனக்கு சொந்தமாகக் கிடைத்த நிர்வாகப் பிரிவில் இருந்து சில நிலங்களை நிவந் தமாக கொடுத்தமையை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

இந்த நிலங்களுக்கும் கோயில் நிர்வாகத்துக்கும் உரித்துடையவர்களாக ஏற்பாடு செய்யப்பட்டவர்கள், காலிங்கராயன் சொற்படி இக்கல்வெட்டை பொறித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

கல்வெட்டின் ஓம்படைக் கிளவியில் குலோத்துங்கசோழக் காலிங்கராயனின் இந்த ஏற்பாடுகளுக்குப் பங்கம் செய்பவர்கள் கங்கைக் கரையில் ஆயிரம் குரால் (கபிலை) பசுக்களை கொன்ற பாவத்திற்கும், ஆயிரம் பிராமணர்களைக் கொன்ற பாவத்திற்கும் உட்பட்டு நாயாகவும், காகமாகவும் பிறப்பார்கள் எனக் குறிப்பிட்டு அவற்றின் உருவங்களும் கல்வெட்டுப் பொறிப்புக்கு கீழே கோட்டுருவமாக வரையப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டால் அறியப்படும் முக்கிய வரலாற்றுச் செய்திகளோடு, அவற்றில் இடம்பெற்றுள்ள சில பெயர்கள், சொற்கள் தொடர்பாக அறிஞர்கள் கூறும் கருத்துக்களும், விளக்கங்களும் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன.

முதலில் “ஸ்வயம்புவுமாந திருக்கோ(ணமலை) யுடைய நாயநாரை” என படிக்கப்பட்டதை பேராசிரியர் இரகுபதி ‘ஸ்வயம்புவுமாந திருக்கோயிலுடைய நாயநாரை’ எனப் படித்திருப்பதை பேராசிரியர் சுப்பராயலு பொருத்தமானதென எடுத்துக்கொண்டுள்ளார்.

இச்சிவாலயத்தில் காணப்படும் சிவலிங்கத்தின் அமைப்பு ஸ்வயம்பு என்ற சொல்லுக்குப் பொருத்தமாக இருப்பதினால் இக்கல்வெட்டு இந்தக் கோயிலையே குறிப்பிடுகின்றது என்பது பேராசிரியர் இரகுபதியின் விளக்கமாகும்.

மேலும் அவர் கல்வெட்டில் வரும் இடப்பெயரை ‘லச்சிகாமபுரம்’ என வாசித்து அது இப்பிரதேசத்திற்கு உட்பட்ட ஒரு இடத்தின் பெயர் எனக் குறிப்பிடுகின்றார்.

இதில் வரும் வேச்சார் நிலம் என்பது குளத்தோடு ஒட்டிய பயிர் நிலம் என்ற பொருளில் சிங்களக் கல்வெட்டுக்களில் வரும் வேசர(வாவி சார்ந்த) என்ற சொல்லுடன் தொடர்புடையது என்பதும் அவரது கருத்தாகும்.

பேராசிரியர் சுப்பராயலு கல்வெட்டில் வரும் ‘மாநாமத்துநாடு’ என்ற பெயர் இங்குள்ள பரந்த பிரதேசத்தை குறித்த இடமாக இருக்கலாம் எனக் கருதுகின்றார்.

இக்கூற்றை பொருத்தமாக கருதும் பேராசிரியர் பத்மநாதன் இதற்குப் பெரியகுளம் கல்வெட்டில் வரும் இதையொத்த பெயரை ஆதாரமாகக் காட்டுகின்றார்.

இக்கல்வெட்டில் ‘பற்று’ என்ற நிர்வாகப் பிரிவு பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இப்பெயர் சோழர் ஆட்சியில் வளநாடு என்ற நிர்வாகப் பிரிவிற்குச் சமமாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனப் பேராசிரியர் பத்மநாதன் கருதுகின்றார்.

பற்று என்ற தமிழ்ச் சொல் சிங்களத்தில் ‘பத்து’ என அழைக்கப்படுகின்றது.

இச்சொற்கள் தற்காலத்திலும் இலங்கையின் பல பாகங்களிலும் நிர்வாக அலகுச் சொற்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இக்கல்வெட்டைப் படியெடுத்த போது கடும் மழையாக இருந்ததாலும், பிற்பகல் மூன்று மணிக்குப் பின்னர் இங்குள்ள காட்டில் யானைகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கும் எனக் கூறப்பட்டதாலும் குறுகிய நேரத்திற்குள் இக்கல்வெட்டை படியெடுக்க வேண்டியிருந்தது.

ஆயினும் மீண்டும் இக்கல்வெட்டைப் படியெடுக்க வேண்டியிருப்பதால் மேலும் பல புதிய தகவல்கள் வெளிவரக்கூடும்.- எனவும் பேராசிரியர் பா.புஸ்பரெட்ணம் கூறினார்.





# யுத்தத்தில் உயிழுந்தவர்களுக்காக பேசாலையில் விசேட திருப்பலி!

(மன்னார் நிருபர்)

யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூறும் முகமாக மன்னார் பேசாலை மக்களின் ஏற்பாட்டில் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தில் திங்கட்கிழமை (27) காலை விசேட திருப்பலி ஒப்புக்கொடுக் கப்பட்டது.

–அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக் கப்பட்டது.

இதன் போது யுத்தத்தில் உயிர் நீத்தவர்களை நினைவு கூர்ந்து தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.



# மருதமுனையில் விளையாட்டு விழா!

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட மருதமுனை அல்– மினன் பாடசாலை முன்பள்ளி மாணவர்களின் வருட இறுதி விளையாட்டு விழா பாடசாலையின் அதிபர் திருமதி எஸ்.எச். எஸ்.ஹார்ஜத்து தலைமையில் பாடசாலை உள்ளக மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் சிக்னல் அரிசி ஆலைய நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் சமூக சேவையாளருமான எம்.எஸ்.எம். ஹாரிஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு விளையாட்டு விழாவை ஆரம்பித்து வைத்தார்.

கௌரவ அதிதியாக இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் பொறியியலாளரும் மருதமுனை மஸ்ஜிதுல் மினன் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை தலைவருமான எம்.எஸ் எம் பாஸில் கலந்து கொண்டார்.

பாடசாலையின் அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர் ஆசிரியர் இசெட் .எம்.றியாஸ், அதிபர் நிஹால் சாலி, பாடசாலையின் பழைய மாணவரும் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்திமான ஏ.எல். எம் ஷினாஸ் உட்பட மாணவர்களின் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் உடற்பயிற்சி கண்காட்சி, எண் கணித பயிற்சி போட்டி உட்பட பாரம்பரிய கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தும் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் இடம் பெற்றன. மாணவர்களின் வினோத உடை கண்காட்சி பலரது பாராட்டையும் பெற்றிருந்தது.

விளையாட்டு விழா நிகழ்வின் இறுதியில் மாணவர்களுக்கு பதக்கம் அணிவிக்கப்பட்டு புத்தகப்பை அன்பளிப்பாக வழங்கப்பட்டது. சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.












# பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினத்தில் ஆர்ப்பாட்டம்!

(அஷ்ரப் ஏ சமத்)

பெண்களுக்கு எதிரான அனைத்து வித வன்முறைகளையும் ஒழிக்கும் சர்வதேச தினத்தை முன்னிட்டு கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக பெண்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

பெண்கள் மத்திய ஸ்தானம் அமைப்பின் சார்பாக நேற்று முன்தினம் (27) இந்த நிகழ்வு ,டம்பெற்றது.

பெண்களுக்கு, பெண் பிள்ளைகளைக்கும் வன்முறைகளும் துன்புறுத்தல்களும் அற்ற கௌரவமான சமூகம் ஒன்றை உருவாக்குவோம்.

பெண்களுக்கு எதிரான அனைத்து வன்முறைகளையும அழித்தொழிக்கும் சர்வதேச தினம் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 25ஆம் திதகதியில் அமைகின்றது. சர்வதேச கொண்டாட்ட தினங்கள் காணப்பட்டாலும் அவை தேசிய மட்டத்தில் கூட குறையவில்லை. பொது சமூகத்தைப் போன்றே குடும்பத்திலும் அவ்வாறே. தமது வீட்டுக்குள்ளும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு பலியாகும் சிறுமிகளும் பெண்களும் உள்ளனர்.

2923 பொலிஸ் தலைமையத்திகத்தின் புள்ளி விவரங்களுக்கு ஏற்ப இடம்பெற்ற குற்றங்கள் 2331. பெண்களுக்கு எதிரான சிறு குற்றங்கள் 6234.

பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் 1765. பெண்களுக்கு எதிரான வேறு குற்றங்கள் 2978.

இப்போது இலங்கை அரசு பால்நிலை பற்றி கொள்கை ஒன்றையும் பெண்கள் சமதானத்தைப் பாதுகாப்பதற்கான தேசிய திட்டம் ஒன்றையும் அங்கீகரித்துள்ளது.

இது தொடர்பில் பெண்களை வலுப்படுத்தி அக் கொள்கையுடனான வேலைத் திட்டங்கள் ஊடாகப் பெண்கள் சம உரிமையைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய முறையிலான சூழமெலான்றும் சட்டத்தொகுப்பொன்றும் துரிதமாகச் செயற்படுத்தப்படும் என நாம் எதிர்பாக்கின்றோம்.

நாம் பெண் தொழிலாளர் வலையமைப்பு செய்யப்பட்ட அமைப்பு என்ற வகையில் பெண்களுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் எதிராக நடத்தப்படுகின்ற அனைத்துவித வன்முறைகளையும் எதிர்ப்போம். பெண்கள் சிறுமியருக்கும் வன்முறையும் துன்புறுத்தல்களும் அற்ற கண்ணியமான சமூகமொன்றை உரித்தாக்கிக் கொடுப்பதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்று வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.





# மட்டு.மெதடிஸ்த மத்தியின் வருடாந்த பரிசளிப்பு விழா!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் அதிபர் ஆர். பாஸ்கரன் தலைமையில் பாடசாலை காட்மன் மண்டபத்தில் திங்கட்கிழமை (27) இடம் பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சரும், மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் கலந்து கொண்டார்.

இதன்போது 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் உயர் பெறுபேறுகள் பெற்ற மாணவர்கள் மற்றும் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அதிதிகளினால் கௌரவம் வழங்கப்பட்டது.

மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்கு மெதடிஸ்த மத்திய கல்லூரியானது சிறந்த சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.





முதல் மந்திரி புஷ்கர் சிங் தாமியுடன் மீட்புக்குழுவினர்

# மீட்புக் குழுவினரைத் தம் தோளில் தூக்கி சுரங்கத்தில் சிக்கியோர் கொண்டாட்டம்

## உள்ளே பிரவகித்த மகிழ்ச்சி

உத்தரகாண்ட் மாநிலம் சில்க்யாரா மலைப்பகுதியில் சுரங்கப்பாதை அமைக்கும்போது சுரங்கத்தின் ஒரு பகுதி சரிந்து விழுந்தது. இதில், 41 தொழிலாளர்கள் சிக்கிக்கொண்டனர். 17 நாள்கள் நடந்த தீவிர மீட்பு பணி வெற்றிகரமாக நிறைவடைந்து, 41 தொழிலாளர்களும் பத்திரமாக மீட்கப் பட்டனர். அவர்கள் அனைவரும் நலமுடன் இருக்கிறார்கள். இதனால் அவர்களின் உறவினர்கள் மட்டுமின்றி இந்திய நாடே மகிழ்ச்சியடைந்துள்ளது.

மீட்புப் பணியில் ஈடுபட்ட குழுவினருக்கு தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் உறவினர்கள் உணர்ச்சிப் பெருக்குடன் நன்றி தெரிவித்துள்ளனர்.

மிகவும் ஆபத்தான மீட்பு பணியின் ஒரு கட்டத்தில் தொய்வு ஏற்பட்டது. இடிபாடுகளை அகற்றும்போது ஆகர் எந்திரம் தடைகளை எதிர்கொண்டது. எனவே, எலிவளை சுரங்க தொழில்நுட்பத்தில் அனுபவம் பெற்ற வல்லுநர்கள் அழைக்கப்பட்டனர். அவர்கள் இப்பணியை வெற்றிகரமாக நிறைவு செய்தனர். 12 பேர் கொண்ட இந்த குழுவினர், தொழிலாளர்கள் இருக்கும் இடத்தை அடைந்ததும், தொழிலாளர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மீட்புக் குழுவினரை தோளில் தூக்கி கொண்டாடினர்.

இதுபற்றி அந்த குழுவில் இடம்பெற்றிருந்த டெல்லியைச் சேர்ந்த குரேஷி கூறுகையில், "நாங்கள் இடிபாடுகளின் கடைசிப் பகுதியை அடைந்தபோது அவர்கள் பேசுவதை கேட்க முடிந்தது. உடனே இடிபாடுகளை அகற்றிவிட்டு மறுபக்கம் இறங்கினோம். அப்போது மகிழ்ச்சியடைந்த தொழிலாளர்கள் நன்றி தெரிவித்தையுடன், என்னைக் கட்டிப்பிடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். பின்னர் என்னை தோளில் தூக்கி கொண்டாடினார்கள்"என்றார்.

குரேஷி, டெல்லியில் உள்ள ராக்வெல் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தில் பணியாற்றுகிறார். இவர், சுரங்கப் பாதை அமைக்கும் பணிகளில் நிபுணர் ஆவார்.

உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த குமார் கூறும்போது, "தொழிலாளர்கள் எனக்கு பாதாம் பருப்பைக் கொடுத்தனர். பின்னர் என் பெயரைக் கேட்டார்கள். சிறிது நேரத்தில் எங்கள் குழுவினர் அனைவரும் உள்ளே வந்தார்கள். நாங்கள் அரை மணி நேரம் அங்கே இருந்தோம். அப்போது தேசிய பேரிடர் மீட்பு படையினரும் உள்ளே வந்து சேர்ந்தனர். அதன்பிறகே நாங்கள் திரும்பினோம். வரலாற்று சிறப்புமிக்க இந்த மீட்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக நாங்களும் இருந்ததில் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்" என்றார்.

# இலங்கையிலிருந்து கடத்தப்பட்ட; மூன்றரைக் கிலோ தங்கம் பறிமுதல்

## நால்வர் தப்பி ஓட்டம் பாம்பன் அருகே சம்பவம்

(மன்னார் நிருபர்)

இலங்கையில் இருந்து படகு மூலம் கடத்தி வரப்பட்ட இந்தியப் பணத்தில் சுமார் 2 கோடி 20 லட்சம் ரூபா மதிப்பிலான மூன்றரைக் கிலோ கடத்தல் தங்கம் பாம்பன் அருகே பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மத்திய சுங்கத்துறை நுண்ணறிவுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலையடுத்து அவர்கள் அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

இதன் போது இன்று புதன்கிழமை அதிகாலை 4 மணியளவில் ஒரு நாட்டுப் படகு சந்தேகத்திற்கிடமாக இந்தியா பாம்பன் அருகே நின்றது. அதனையடுத்து படகிலிருந்து நான்கு பேரும் கரையை நோக்கி வரும் போது மறைந்து இருந்த அதிகாரிகள் அவர்களைப் பிடிக்க முயன்றனர். அப்போது தாங்கள் கொண்டு வந்த பொதியைப் படகில் விட்டு விட்டு அவர்கள் கடலில் குதித்துத் தப்பினார்.



பின்னர் கடலில் நிறுத்தப்பட்டிருந்த படகை சோதனை செய்தபோது அதில் சுமார் மூன்றரைக் கிலோ கடத்தல் தங்க கட்டிகள் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதையடுத்து கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட நாட்டுப் படகை பறிமுதல் செய்த சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தை ராமேஸ்வரம் சுங்கத்துறை அலுவலகத்தில் கொண்டு சென்று சோதனை செய்தனர்.

மேலும் தப்பி ஓடியவர்கள் குறித்து சுங்கத்துறை மற்றும் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்து அவர்களைத் தீவிரமாகத் தேடி வருவதோடு, தொடர்ந்து தப்பியோடியவர்கள் மற்றும் கடத்தலில் தொடர்புடைய நபர்கள் குறித்தும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தின் மதிப்பு சுமார் 2 கோடி 20 இலட்சம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் மத்திய சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவினரால் பறிமுதல் செய்த படகை மண்டபம் சுங்கத்துறை அலுவலகத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

அதிகாலையில் பாம்பன் அருகே கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டமை அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# 2024 இல் இந்திய விண்வெளி வீரர் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு

## அமெரிக்காவின் நாசா தரப்பில் தகவல்

2024 இறுதியில் இந்தியாவைச் சேர்ந்தவருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அவர் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுவார் என அமெரிக்கா கூறியுள்ளது.

நாசா நிர்வாக அதிகாரி பில் நெல்சன், இந்தியா வந்துள்ளார். டில்லியில் அவர் மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங், அதிகாரிகள், விஞ்ஞானிகளைச் சந்தித்தார். அப்போது, சந்திரயான்-3 திட்ட வெற்றிக்கு பாராட்டு தெரி வித்தார்.

பிறகு பில் நெல்சன் கூறியதாவது:-

இந்தியாவைச் சேர்ந்த விண்வெளி வீரருக்கு நன்கு பயிற்சி அளித்து, சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அவர் அனுப்பி வைக்கப்படுவார். வீரர் தேர்வை, இஸ்ரோ மேற்கொள்வதுடன், பயணம் தொடர்பான திட்டங்களையும் வடிவமைக்கும்.

நிலவின் தெற்கு பகுதிக்கு பல செயற்கைக்கோள்களை அனுப்ப அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இருப்பினும், அந்த பகுதியில் முதலில் தரையிறங்கிய நாடு என்ற வகையில் இந்தியா பாராட்டுக்கு உரியது.

2040க்குள் தனி விண்வெளி நிலையம் அமைக்க இந்தியா முடிவு செய்துள்ளது. இதற்கு இந்தியா விரும்பினால், அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கும்.



இரு நாடுகளும் அறிவியலில் இணைந்து செயல்படுகின்றன. இரு நாடுகளின் கூட்டு தயாரிப்பான 'நிசார்' செயற்கைக்கோள்( Nasa-Isro Synthetic Aperture Radar- (NISAR)) அடுத்தாண்டு முதல் காலாண்டில் விண்ணில் செலுத்தப்பட உள்ளது. 1 பில்லியன் டொலர் செலவில் இந்த செயற்கைக் கோள் உருவாக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம், பூமி மற்றும் பருவநிலை மாற்றம் குறித்து ஆய்வு செய்யப்படும். நிலம், நீர் அல்லது பனிக்கட்டிகளில் ஏற்படும் மாற்றங்களை உடனுக்குடன் தெரிந்து கொள்ள முடியும். - இவ்வாறு அவர் கூறினார்.

# இஸ்ரேல் - ஹமாஸ் இடையில் தொடரும் கைதிகள் பரிமாற்றம்

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பு இடையேயான மோதலை ஒட்டி, எகிப்து, அமெரிக்கா மற்றும் கத்தார் ஆகிய நாடுகள் மேற்கொண்ட மத்தியஸ்த முயற்சியின் பலனாக, இஸ்ரேலும் ஹமாஸ் அமைப்பும் போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு சம்மதம் தெரிவித்தன.

இதன்படி, கடத்தப்பட்ட 240 பேரில் பெண்கள் மற்றும் குழந்தைகள் என 50 பேர் 4 நாள்களில் அடுத்தடுத்து விடுவிக்கப்படுவார்கள் என்றும் இதனால், இருதரப்பு மோதலும் 4 நாள்களுக்கு நிறுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முதலில் 13 பேரும், பின்னர் 17 பேரும் என ஹமாஸ் அமைப்பு பிடித்து வைத்திருந்த பணயக் கைதிகள் அடுத்தடுத்த நாள்களில் விடுவிக்கப்பட்டனர். 4 ஆவது நாளில் 11 பேரை ஹமாஸ் அமைப்பு விடுவித்தது.

இந்தப் போர்நிறுத்த ஒப்பந்தம் நேற்று முன்தினம் முடிவுக்கு வந்த நிலையில், கத்தார் நாட்டின் மத்தியஸ்த பேச்சுவார்த்தையின் பலனாக, கூடுதலாக 2 நாள்களுக்கு போர்நிறுத்த ஒப்பந்தம் நீடிக்கப்பட்டது. இதனால், பணய கைதிகள் விடுவிப்புக்கான சாத்தியமும் தொடரும் என எதிர்பார்க்கப்பட்டது.



போர்நிறுத்த ஒப்பந்தம் 2 நாட்களுக்கு நீடிக்கப்பட்ட சூழலில், போர் நிறுத்த ஒப்பந்தத்தின் 5 ஆவது நாளான நேற்று 30 பாலஸ்தீனியக் கைதிகள் இஸ்ரேல் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டனர். இதனை இஸ்ரேல் நாட்டின் சிறை துறை உறுதிப்படுத்தி உள்ளது என 'தி டைம்ஸ் ஒவ் இஸ்ரேல்' தெரிவித்துள்ளது.

இதுபற்றி கத்தார் வெளியிட்ட செய்தியில், விடுவிக்கப்பட்ட கைதிகளில் 15 பேர் பெண்கள் மற்றும் 15 பேர் சிறுவர், சிறுமிகள் ஆவர் என தெரிவித்து உள்ளது. ஆறு நாள் போர்நிறுத்தத்தின் 5ஆவது நாளான நேற்று காசாவில் இருந்து 12 பணய கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அவர்களில் 2 பேர் வெளிநாட்டினர். அதில், முதியவர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களும் அடங்குவார்கள்.

காசாவில் இருந்து 60 பெண்கள் மற்றும் குழந்தைகள் என 80-க்கும் மேற்பட்டோர் விடுவிக்கப்பட்டு உள்ளனர். இஸ்ரேலில் உள்ள சிறைகளில் இருந்து 180க்கும் கூடுதலானோர் விடுதலை செய்யப்பட்டனர்.

எனினும், அனைத்து பணய கைதிகளையும் விடுவிப்பது, ஹமாஸ் அமைப்பை அழிப்பது மற்றும் இஸ்ரேல் மக்களுக்கு காசா ஓர் அச்சுறுத்தலாக இருக்காது என்பது உறுதி செய்யப்படுவது ஆகியவற்றை செயல்படுத்துவோம் என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு நேற்றுக் கூறினார்.